முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்

முன்னிலை: திரு.எஸ்.ஜவகர், பி.எல்.,

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி , கடலூர்.

2023 ம் ஆண்டு மார்ச் மாதம் 23-ம் நாள் வியாழக்கிழமை

**அமர்வு வழக்கு எண்.16/2020-ல்**

**குற்றவியல் பல்வகை மனு எண்.1001/2023**

நவீன் த/பெ. விஜய் ஆனந்த் .. மனுதாரர்/1 ம் எதிரி

எதிர்

காவல் ஆய்வாளர்,

காடாம்புலியூர் காவல் நிலையம்,

குற்ற எண்.502/2018 .. எதிர்மனுதாரர்/குற்றமுறையிடுபவர்

இம்மனு 04.03.2023 அன்று என் முன்பு இறுதியான விசாரணைக்கு வந்து, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எஸ்.ரவிச்சந்திரன் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை வழக்கறிஞர் திரு.பி.பக்கிரி அவர்களும் ஆஜராகி, இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு, இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனுவானது, கு.வி.மு.ச. பிரிவு 311-ன் கீழ், அமர்வு வழக்கு எண்.16/2020-ல் அ.சா.1-ஐ குறுக்கு விசாரணை செய்வதற்காக மீண்டும் அழைத்து உத்தரவிட கோரி, மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்:**

இந்த வழக்கானது அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்காக நிலுவையில் இருந்து வருகிறது. இந்த வழக்கில் ஏற்கெனவே அ.சா.1 விசாரிக்கப்பட்டு, அவர் எதிரிகள் தரப்பு வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். இந்நிலையில் இந்த மனுதாரர்/1ம் எதிரி அவருக்காக தனியாக புதிய வழக்கறிஞரை நியமித்துள்ளார். எனவே, சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில், சம்பவத்தின் உண்மை நிலையையும், இந்த மனுதாரர்/1ம் எதிரி எந்த குற்றமும் செய்யவில்லை என்பதையும் நிரூபிக்க அ.சா.1-ஐ மேலும் குறுக்கு விசாரணை செய்வதற்காக மீண்டும் அழைக்க வேண்டியது அவசியமாகிறது. அ.சா.1 முக்கிய சாட்சி என்பதாலும், வழக்கின் நியாயமான முடிவிற்காகவும் மேற்படி சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய வேண்டியது மிகவும் முக்கியமானதாக இருக்கிறது. மனுதாரர் மேற்படி சாட்சிக்கு சாட்சி படி செலுத்திவிடுவதாகவும் உறுதி கூறுகிறார். மனு அனுமதிக்காவிடில் மனுதாரருக்கு கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும். எனவே, மனுவை அனுமதித்து உத்தரவிட வேண்டுமென்று பிராத்திக்கிறார்.

3. **எதிருரையின் சுருக்கம் :**

அரசு தரப்பு சாட்சியை ஏற்கெனவே முழுவதுமாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டிருக்கும்போது, சாட்சியை மீண்டும் அழைப்பதற்கு புதிய வழக்கறிஞரை நியமித்திருப்பது ஒரு காரணமாக இருக்க முடியாது. வழக்கு நடவடிக்கைகளை காலதாமதப்படுத்தும் நோக்கத்துடனேயே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அரசு தரப்பு சாட்சி ஏற்கெனவே முழுவதுமாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ள நிலையில் விடுபட்டதை பூர்த்தி செய்யும் நோக்குடனேயே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டுமென்று கோரப்பட்டுள்ளது.

4. இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.

5. **<u>தீர்வு :</u>**

இந்த மனுதாரர்/1ம் எதிரி அவருக்காக தனியாக புதிய வழக்கறிஞரை நியமித்துள்ளதால் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில், சம்பவத்தின் உண்மை நிலையையும், இந்த மனுதாரர்/1ம் எதிரி எந்த குற்றமும் செய்யவில்லை என்பதையும் நிரூபிக்க அ.சா.1-ஐ மேலும் குறுக்கு விசாரணை செய்வதற்காக மீண்டும் அழைக்க வேண்டியது அவசியமாகிறது என்றும், அ.சா.1 முக்கிய சாட்சி என்பதாலும், வழக்கின் நியாயமான முடிவிற்காகவும் மேற்படி சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய வேண்டியது மிகவும் முக்கியமானதாக இருக்கிறது என்றும், எனவே, மேற்படி சாட்சியை மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய உத்தரவிட கோரி, இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர்/அரசு தரப்பில், வழக்கு நடவடிக்கைகளை காலதாமதப்படுத்தும் நோக்கத்துடனேயே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், சாட்சியை மீண்டும் அழைப்பதற்கு புதிய வழக்கறிஞரை நியமித்திருப்பது ஒரு காரணமாக இருக்க முடியாது என்றும், அரசு தரப்பு சாட்சி

ஏற்கெனவே முழுவதுமாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ள நிலையில், விடுபட்டதை பூர்த்தி செய்யும் நோக்குடனேயே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

6. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கு ஆவணங்களைப் பரிசீலிக்கையில், அ.சா.1 , 13.12.2022 ம் தேதி விசாரணை செய்யப்பட்டு, அன்றைய தேதியிலேயே குறுக்கு விசாரணையும் செய்யப்பட்டுள்ளார். இருந்தபோதிலும், மனுதாரரின் மனுவில் அ.சா.1-ஐ மீண்டும் அழைத்து மேற்கொண்டு குறுக்கு விசாரணை செய்வதற்கு, to establish that the real manner of incident என்று காரணம் தெரிவித்துள்ளார். இந்த வழக்கானது 2020 ம் ஆண்டிலிருந்து இந்த நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது. அ.சா.1-ஐ ஏற்கெனவே இந்நீதிமன்றத்தில் குறுக்கு விசாரணை செய்து முடித்த பின்னர், போதுமான காரணங்கள் இன்றி மேற்படி சாட்சியை மீண்டும் அழைத்து விசாரிக்க வேண்டுமென்று கோரியிருப்பது, சாட்சிக்கு மிகுந்த சிரமத்தையும், கஷ்டத்தையும் கொடுக்கக் கூடிய ஒன்று ஆகும். மேலும், மனுதாரர் புதிதாக வழக்கறிஞரை நியமித்திருப்பதாக கூறியிருப்பதும், மேற்படி சாட்சியை மீண்டும் அழைத்து விசாரிப்பதற்கு போதுமான முகாந்திரம் அல்ல. எனவே, இந்த மனுவை அனுமதிக்க போதுமான முகாந்திரங்கள் இல்லை என்று முடிவு கண்டு, மனுதாரரின் மனு அனுமதிக்கத்தக்கதல்ல என்றும், தள்ளுபடிக்குரியது என்றும் தீர்மானித்து, இவ்வாறாக இம்மனுவில் பிரச்சனைக்குத் தீர்வுக் காணப்படுகிறது.

7. முடிவில், இந்த மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2023 ம் ஆண்டு மார்ச் மாதம் 23-ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

S JAWAHAR Digitally signed by S JAWAHAR Date: 2023.03.27 14:02:38 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி ,

கடலூர்,

Draft/Fair Order
Crl.M.P.No.1001/2023 in
S.C.No.16/2020
Dt. 23.03.2023.